ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

மூன்றாம்பத்து

______________

10-ஆம் திருமொழி - நெறிந்தகருங்குழல்

______*_______

* நெற்ந்தகருங்குழல்மடவாய்! நின்னடியேன்விண்ணப்பம் *
செறிந்தமணிமுடிச்சனகன் சிலையிறுத்துநினைக்கொணர்ந்தது
அறிந்து * அரசுகளைகட்ட அருந்தவத்தோன்இடைவிலங்க *
செறிந்தசிலைகொடுதவத்தைச் சிதைத்ததும்ஓரடையாளம். (1)

அல்லியம்பூமலர்க்கோதாய்! அடிபணிந்தேன்விண்ணப்பம் *
சொல்லுகேன்கேட்டருளாய் துணைமலர்க்கண்மடமானே! *
எல்லியபோதினிதிருத்தல் இருந்ததோரிடவகையில் *
மல்லிகைமாமாலைகொண்டு அங்குஆர்த்ததும்ஓரடையாளம். (2)

கலக்கியமாமனத்தனளாய்க் கைகேசிவரம்வேண்ட *
மலக்கியமாமனத்தனனாய் மன்னவனும்மறாதொழிய *
குலக்குமரா! காடுறையப் போவென்றுவிடைகொடுப்ப *
இலக்குமணந்தன்னொடும் அங்குஏகியதுஓர்டையாளம். (3)

வாரணிந்தமுலைமடவாய்! வைதேவீ! விண்ணப்பம் *
தேரணிந்தஅயோத்தியர்கோன் பெருந்தேவீ! கேட்டருளாய் *
கூரணிந்தவேல்வலவன் குகனோடும்கங்கைதன்னில் *
சீரணிந்ததோழமை கொண்டதும்ஓரடையாளம். (4)

மானமருமென்னோக்கி! வைதேவி! விண்ணப்பம் *
கானமரும்கல்லதர்போய்க் காடுறைந்தகாலத்து *
தேனமரும்பொழிற்சாரல் சித்திரகூடத்துஇருப்ப *
பால்மொழியாய்! பரதநம்பி பணிந்ததும்ஓரடையாளம். (5)

சித்திரகூடத்துஇருப்பச் சிறுகாக்கைமுலைதீண்ட *
அத்திரமேகொண்டெறிய அனைத்துலகும்திரிந்தோடி *
வித்தகனே! இராமாவோ! நின்னபயமென்றுஅழைப்ப *
அத்திரமேஅதன்கண்ணை அறுத்ததும்ஓரடையாளம். (6)

மின்னொத்தநுண்ணிடையாய்! மெய்யடியேன்விண்ணப்பம் *

பொன்னொத்தமானொன்று புகுந்துஇனிதுவிளையாட *
நின்னன்பின்வழிநின்று சிலைபிடித்துஎம்பிரான்ஏக *
பின்னேஅங்குஇலக்குமணன் பிரிந்ததும்ஓரடையாளம். (7)

மைத்தகுமாமலர்க்குழலாய்! வைதேவீ! விண்ணப்பம் *
ஒத்தபுகழ்வானரக்கோன் உடனிருந்துநினைத்தேட *
அத்தகுசீரயோத்தியர்கோன் அடையாளமிவைமொழிந்தான் *
இத்தகையால்அடையாளம் ஈதுஅவன்கைமோதிரமே. (8)

* திக்குநிறைபுகழாளன் தீவேள்விச்சென்றநாள் *
மிக்கபெருஞ்சபைநடுவே வில்லிறுத்தான்மோதிரம்கண்டு *
ஒக்குமால்அடையாளம் அனுமான்! என்று * உச்சிமேல்
வைத்துக்கொண்டுஉகந்தனளால் மலர்க்குழலாள்சீதையுமே. (9)

* வாராரும்முலைமடவாள் வைதேவிதனைக்கண்டு *
சீராரும்திறலனுமன் தெரிந்துரைத்தஅடையாளம் *
பாராரும்புகழ்ப்புதுவைப் பட்டர்பிரான்பாடல்வல்லார் *
ஏராரும்வைகுந்தத்து இமையவரோடுஇருப்பாரே. (10)

அடிவரவு : நெறிந்த அல்லி கலக்கிய வாரணி மான் சித்திரகூடத்து மின் மைத்தகு திக்கு வாராரும் கதிர்.